# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 17.07.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

விருந்தோம்பல் என்பது திருக்குர்ஆனிலும் குறிப்பிடப்பட்ட ஒரு நல்லொழுக்கம் ஆகும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பற்றி குறிப்பிடும்போது இரண்டு இடங்களில் அன்னாரது விருந்தோம்பல் பற்றி கூறப்பட்டுள்ளது. அதில் முதல் இடத்தில் (51:26) இவ்வாறு வருகிறது.

அவரது வீட்டிற்கு வந்த அந்த விருந்தாளிகள் அவரிடம் ஸலாம் கூறிய போது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஸலாமிற்கு பதில் கூறினார்கள். அதற்கு சாதாரண பொருள், வந்த விருந்தாளிகளும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு பதில் கூறினார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் அதற்கு பதில் கூறினார்கள் என்பதாகும். ஆனால் முப்ரதாத் போன்ற சொற்பொருள் அகராதியில் ஒரு வித்தியாசம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வந்தவர் 'ஸலாமா' என்று கூறினார். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது பதிலில் ஸலாமுன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் பதிலில் பேஷ் (உகரம்) பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மிகவும் பொருட்செறிவு கொண்டது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பதில் கூறுவதில் சிறப்பான ஒரு கண்ணியமான வார்த்தையை கைக்கொண்டார்கள். அது குறித்து திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது.

அதுபற்றி சூரா அந்நிஸாவின் 87வது வசனத்தில் வருகிறது:

உங்களுக்கு யாரேனும் நல்வாழ்த்துத் தெரிவித்தால் அதனை விடச் சிறந்த முறையில் வாழ்த்துங்கள் அல்லது (குறைந்தது) அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கணக்கெடுப்பவனாவான். (4:87)

அதனை விட சிறந்த வார்த்தைகயில் பதில் கூறுங்கள். ஸலாமுன் என்ற ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய பதிலில் உங்களுக்கு எப்போதும் சாந்தி அமைதி கிடைத்து வரட்டுமாக என்ற துஆ அடங்கியுள்ளது.

இது ஒரு நபியின் நல்லொழுக்கத்திற்கும் துஆவின் உயர் தகுதிக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதைப்பற்றியெல்லாம் அன்னியர்களாக இருந்த அந்த விருந்தாளிகள் அறிந்திருக்காத போதிலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய பதிலின் விளைவு அவ்விடத்தில் உடனே வெளிப்பட்டது.

இந்த உதாரணம் மூலம் நமக்கு கற்றுத்தரப்பட்டுள்ளது. நீங்கள் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உம்மத்தினராக இருக்கின்றீர்கள். நல்வரவு கூறும்போது உங்கள் நடைமுயையும் இந்த கட்டளைக்கு ஏற்ப அமைய வேண்டும். எப்போதும் மற்றவரை விட அதிகமான – அவர் கூறியதை விட சிறந்த பதிலையே – சிறந்த துஆவையே அவருக்கு நீங்கள் வழங்க வேண்டும். அதன் மூலம் விருந்தாளி தாம் வந்ததன் மூலம் விரும்தோம்பல் செய்பவர் மகிழ்ச்சியடைந்திருப்பதாக உணர வேண்டும். இன்னொரு விஷயம் உடனேயே அன்னார் விருந்தாளிக்கு தங்குமிடம் ஏற்பாடு செய்தார். உடனே தனது வீட்டுக்காரர்களிடம் சென்று கொழுத்த ஆட்டைக் கொண்டு வந்தார். விருந்தாளிக்கு அதனை சமைத்து வழங்கினார். தனது வாய்ப்பிற்கேற்ப சிறந்த உணவை வழங்குவது இறைவனுக்கு மிகவும் பிடித்த ஒரு காரியமாகும். அதனால்தான் திருக்குர்ஆனிலிருந்து ஒரு வரலாறாக நமக்கு கூறப்பட்டுள்ளது. அதுவன்றி திருக்குர்ஆனின் அப்பகுதியில் மேலும் கீழும் கூறப்பட்டுள்ள விஷயங்களுக்கும் விருந்தோம்பலுக்கும் எந்த தொடர்பும் இல்லை. மற்றபடி வந்தவர்கள் லூத்தின் சமுதாயம் செய்த தவறான செயல்களுக்கு தண்டனை கிடைக்கப்போகிறது என்ற செய்தியை எடுத்துக் கொண்டு வந்தவர்கள், வரும் வழியில் ஹஸ்ரத் இப்ராஹீம்

(அலை) அவர்களின் வீட்டின் முன் நின்று அன்னாரிடமும் லூத் உடைய சமுதாயத்திற்கு வரப்போகிற தண்டனை பற்றி குறிப்பிட்டார்கள். இந்த இடத்தில் விருந்தோம்பலைப் பற்றி அதிலுள்ள ஒரு முக்கிய அம்சம் விளக்கப்பட்டுள்ளது. முதலாவது வந்தவர்கள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அறிமுகமானவர்கள் அல்லர். காட்டு வழியாக பயணம் மேற்கொண்டு வந்த பயணிகள் ஆவர். எனவே அவர்களிடம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு உணவு தேவையா? பசிக்கிறதா? என்றெல்லாம் கேட்காமலேயே பொரித்த ஆட்டை எடுத்து வைத்தார். எனவே இவ்வாறு விருந்தாளியின் தேவையைக் குறிப்பறிந்து கேட்காமலேயே அதனை பூர்த்தி செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமும் இதுபோன்ற விருந்தோம்பல் முறை காணப்படுகிறது. அது அவர்களின் தனிப்பட்ட சிறப்பாக இருந்தது.

அக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மிகச் சிறந்த விருந்தோம்பல் பண்பு காணப்பட்டது. எனவே அவர்களுக்கு முதல் வஹி இறங்கிய போது மிகவும் பயந்து நடுங்கியவாறு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் தமக்கு நடந்தவற்றை கூறியபோது அன்னார் அவர்களுக்கு ஆறுதல் வழங்கியவாறு கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணை! அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவு செய்யமாட்டான். ஏனெனில் நீங்கள் உறவினர்களை ஆதரிக்கின்றீர்கள். மக்களின் சுமையை நீங்கள் சுமக்கின்றீர்கள். உலகிலிருந்து மறைந்து விட்ட புகழுக்குரிய நல்லொழுக்கங்களை உலகில் மீண்டும் நிலைநாட்டியுள்ளீர்கள். விருந்தோம்பல் செய்கின்றீர்கள். துயருற்றவர்களுக்கு உதவி செய்கின்றீர்கள். இத்தகைய நல்லொழுக்கம் உடையவரை இறைவன் எவ்வாறு இழிவுபடுத்துவான்; மறைந்துபோன நல்லொழுக்கத்துடன் விருந்தோம்பலைப் பற்றியும் கூறுவது அவர்களின் விரும்தோம்பும் பண்பு மற்றவரை விட மிகவும் உயர்ந்ததாகவும் ஒப்புயர்வற்றதாகவும் இருந்ததாகக் காட்டுகிறது.

நுபுவ்வத் வாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் விருந்தோம்பல் மிகவும் புகழுக்குரியதாக ஆகியிருந்தது. அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பாருங்கள்.

உண்ணல், குடித்தல் போன்ற விருந்தோம்பல் மற்றும் வரவேற்பும் மற்ற அனைத்துப் பண்புகளும் உயர் தரமானதாகவே விளங்கியது. அவர்களின் அழகிய முன்மாதிரியை எடுத்து வைப்பேன்.

அவர்கள் விருந்தாளிகளின் பசி, தாகத்தை மட்டும் கவனத்தில் கொள்ளவில்லை. விருந்தாளியின் உணர்வுகளையும் கவனத்தில் கொண்டார்கள். விருந்தாளியின் சிறு சிறு தேவைகளையும் கருத்தில் கொண்டார்கள். தனது கைகளால் விருந்தாளிக்கு தொண்டு செய்தார்கள். அவர்களின் போதனைகளும், அச்செயல்களும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களுக்கு உயர்ந்த முன்மாதிரியாகும். எனது முன்மாதிரி இறைவன் எனக்கு வழங்கிய போதனைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டதாகும். நீங்கள் என்னுடன் தொடர்பு வைத்தவர்கள் எனில் உங்கள் அமலும் அவ்வாறு இருக்க வேண்டும். என் மீது அன்பு வைத்திருப்பதாக நீங்கள் வாதம் செய்வீர்கள் எனில், எனது இந்த செயல்களைப் பின்பற்றுங்கள். இந்த விருந்தோம்பல், தொண்டுகளை நான் செய்தது பிறரது பாராட்டு பெறுவதற்காக அன்று. மாறாக இறைவன் உயர் நல்லொழுக்கங்களை மேற்கொள்ளுமாறு எனக்கு கட்டளையிட்டதனால் ஆகும். எனவே அல்லாஹ்வின் திருப்தி தான் நமது இலக்காகவும் இருக்க வேண்டும்.

ஒரு ஹதீஸில் வருகிறது. அன்னார் கூறுகிறார்கள். மிகச் சிறந்த முறையில் விருந்தோம்பல் செய்யுங்கள். மூன்று நாட்கள் விருந்தோம்பல் செய்யுங்கள்.

உங்களுக்கு அல்லாஹ் மற்றும் இறுதிநாளின் மீது ஈமான் இருந்தால் விருந்தாளிக்கு கண்ணியம் செய்யுங்கள்.

ஆகவே விருந்தோம்பல் மிக உயரிய பண்பாகும். அதற்கு ஈடாக அல்லாஹ் ஆகிரத்திலும் கூலி தருகிறான். இறைவன் கூறுகிறான். நீங்கள் சின்னச் சின்ன நன்மைகளை செய்தாலும் அதன் கூலியைப் பெறுவீர்கள். ஆனால் அச்செயல் இறை திருப்தியைப் பெறும் நோக்கத்தில் செய்ய வேண்டும். அதுவே ஈமான் உறுதிப்படக் காரணமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் விருந்தோம்பலின் போது விருந்தாளியின் உணர்வை கவனத்தில் கொண்டார்கள். ஒரு காஃபிர் விருந்தாளியாக வந்தாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அழகிய முன்மாதிரி கொண்டு இத்தகைய மனிதரின் போதனை எவ்வளவு சிறந்ததாக இருக்கும் என்று சிந்திக்க வைத்தது. அன்னாரின் விருந்தோம்பல் விருந்தாளியின் உலகத் தேவையை மட்டும் பூர்த்தியாக்கவில்லை. ஆகிரத்தும் கூட விருந்தாளிக்கு கிடைத்தது. அன்னார் விருந்தாளியின் உணவுத் தேவையை மட்டும் கருத்தில் கொண்டதில்லை. விருந்தாளியின் வெளிப்படையான பசியை ஆற்றும் வேலை மட்டும் அன்னார் செய்ததில்லை. மாறாக அந்த விருந்தாளியின் ஆகிரத் வாழ்விற்குப் பயன்படும் ஆன்மீக உணவும் கூட ஏற்பாது செய்து தந்தார்கள். விருந்தோம்பல் குறித்த அவர்களின் போதனையும் அதுவே. உங்களது ஒவ்வொரு பணிக்குப் பின்னாலும் இறை திருப்தி இருக்க வேண்டும்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு மனிதர் காஃபிராக இருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய விருந்தாளியாக வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களுக்கு ஒரு ஆட்டின் பாலைக் கொண்டு வருமாறு கூறினார்கள். அது அவருக்கு போதுமானதாக இல்லை. இவ்வாறு இரண்டாவது, மூன்றாவது என ஏழு ஆட்டின் பாலை அவ்விருந்தாளி குடித்து விட்டார். அன்னாரது நல்லொழுக்கம் நன்மையை சொல்லிக் காட்டாமை, முகஞ்சுளிக்காமை கண்டு, எந்த கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் தமது பசியை அகற்றுவதில் அன்னார் காட்டிய கவனத்தை நினைத்து மறுநாள் மறுநாள் அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மறு நாளைக்கும் ஆட்டின் பாலை வழங்க ஏற்பாடு செய்தார்கள்.

ஒரு ஆட்டின் பாலை விருந்தாளி குடித்ததும் இன்னொரு ஆட்டின் பாலை கொண்டு வருமாறு கூறியதும் அவரால் அதனை முழுமையாக குடிக்க முடியவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மூஃமின் ஒரு குடலுக்கு அருந்துகிறார். காஃபிர் ஏழு குடலுக்கு அருந்துகிறார். இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் முன்பும், அதற்குப் பிறகும் அவரது மனத்தை வருத்துமாறு பசியுடன் அவர் எழுந்திரிக்கத்தக்க எந்த சொல்லையும் கூறவில்லை. முந்தைய இரவு அவர் உண்டதை வைத்து மறுநாளும் அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் அவர் அதனை மறுத்த போதுதான் மூஃமின் ஒரு குடலுக்கு அருந்துகிறார். காஃபிர் ஏழு குடலுக்கு அருந்துகிறார் என்று கூறினார்கள்.

அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு மனித வாழ்வின் இலக்கை, உணவு உண்ணும் நோக்கத்தை புரிய வைத்தார்கள். வாழ்க்கை என்பது உண்ணல், குடித்தல் மட்டுமல்ல. இறைவனது திருப்தியைப் பெறுவதே வாழ்க்கை என்று புரிய வைத்தார்கள்.

அபிசீனியாவிலிருந்து முஹாஜிரீன்கள் ஊர் திரும்பியபோது நஜ்ஜாஷி மன்னர் சார்பாக ஒருவர் வந்திருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வந்தவருக்கு தானே விருந்தோம்பல் செய்தார்கள். சஹாபாக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் சேவை செய்ய இருக்கிறோம். நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள். நமது எஜமானர் (ஸல்) அவர்கள் எவ்வளவு அழகான பதிலைக் கூறினார்கள். அப்பதில் தமது அன்பு சஹாபாக்களின் மீது அன்னார் வைத்திருந்த கண்ணியமும் வெளிப்பட்டது. அல்லாஹ்வுடைய கட்டளையாகிய கருணைக்கு ஈடு கருணையேதான் என்பதனையும் அமல்படுத்துவதாகவும், நன்றிகாட்டுதலின் உயர் முன்மாதிரியாகவும் அக்கூற்று விளங்கியது. அன்னார் கூறினார்கள். இம்மக்கள் நமது தோழர்களுக்கு கண்ணியம் செய்தார்கள். அத்தகைய மக்களுக்கு நானே எனது கைகளால் சேவை செய்ய விரும்புகிறேன். அவர்கள் நமக்கு செய்த உபகாரத்திற்கு பிரதி உபகாரமாகவும் இருக்கும்! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த பதிலால் அன்னாரின் விருந்தோம்பலைக் கண்டு அந்தப் பிரயாணக் கூட்டம் வியப்பில் ஆழ்ந்து போயிருக்கும்.

இவர் எத்தகைய மன்னராக இருக்கிறார்! தன் கையால் சாதாரண மனிதர்களுக்கு சேவை செய்கிறார்! இந்த சேவையின் மூலம் மனித நேயத்தின் இலக்கணத்தையே உயர்த்தி விட்டார்! இத்தகைய ஒரு நற்செயலை நாம் முன்னர் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை.

பிறகு அம்மனிதர் இரவில் வயிறு சரியில்லாமல் படுக்கையை அசுத்தமாக்கி விட்டார். அதனால் வெட்கப்பட்டு யாரிடமும் சொல்லாமல் வெளியேறி விட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதுபற்றி சிறிதும் குறைபட்டுக் கொள்ளாமல் தானே படுக்கையை சுத்தம் செய்தார்கள். வழியில் தாம் ஏதோ ஒரு பொருளை விட்டு விட்டு வந்ததாக நினைவுக்கு வரவே அவர் திரும்பி வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரது படுக்கையை சுத்தம் செய்வதைப் பார்த்து உருகிவிட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கிறிஸ்தவரின் சம்பவத்தைக் கூறுகிறார்கள்.

அது இதே சம்பவமாகவும் இருக்கலாம். அல்லது வேறு ஒரு சம்பவமாகவும் இருக்கலாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை விவரித்து விட்டு கூறுகின்றார்கள். அன்னாரின் இந்த நற்குணத்தைக் கண்டு அக்கிறிஸ்தவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்.

புகாரியின் அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலால் பெரும் புரட்சி சஹாபாக்களிடம் உருவாகியிருந்தது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு காஃபிராக இருந்த விருந்தாளி ஒருவர் வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவருக்கு உணவு ஏதாவது கிடைக்குமா என்று தமது வீட்டில் விசாரித்தார்கள். தண்ணீரை தவிர வீட்டில் எதுவும் இல்லை என்று பதில் வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், இந்த விருந்தாளிக்கு உணவுக்கான ஏற்பாட்டை யார் செய்வார்? என்று கேட்டார்கள். ஒரு அன்சாரி தாம் ஏற்பாடு செய்வதாகக் கூறினார். அந்த அன்சாரி வீட்டிற்குப் போய் மனைவியிடம் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் விருந்தாளிக்காக உணவுக்கு ஏற்பாடு செய்தார். மனைவி கூறினார்: இன்று குழந்தைக்காக மட்டும்தான் சிறிது உணவு இருக்கிறது. அந்த அன்சாரி கூறினார். சரி அந்த உணவை தயார் செய். உணவு தயாராகும் முன் குழந்தையை உறங்க வைத்து விடு. அந்த வகையில் அப்பெண்ணும் உணவு தயார் செய்தார். குழந்தைகளை பசியோடு உறங்க வைத்தார். விருந்தாளி உண்ண வரும்போது விளக்கை சரி செய்யும் சாக்கில் அணைத்து விட்டார். பிறகு வந்த விருந்தாளியுடன் இவ்விருவரும் அமர்ந்து சாப்பிடுவது போன்று வெற்று ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தனர். விருந்தோம்புபவரும் தம்முடன் சேர்ந்து உணவு உண்டு கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு விருந்தாளியும் உணவை உண்டு முடித்தார். விருந்தளித்த இருவரும் பசியுடன் படுத்து விட்டனர். காலையில் அந்த அன்சாரி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்த போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சிரித்தவாறு கூறினார்கள். இரவில் உமது செயலைக் கண்டு இறைவனும் சிரித்து விட்டான். இதையொட்டி இந்த வசனமும் இறங்கியது.

சில மூஃமின்கள தம்மை விட மற்றவருக்கு முதன்மை வழங்குகின்றார். தாம் தேவையுள்ளவராக இருக்கின்ற நிலையில் உள்ளத்தின் பேராசையிலிருந்து காப்பாற்றப்படுபவர்களே வெற்றியாளர்கள். (59:10)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் நிரந்தரமாக தங்கியிருந்த ஒரு விருந்தாளிகளின் கூட்டம் இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எந்த வார்த்தையும் கேட்காமல் விட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் அவர்கள் தங்கியிருந்தனர். இந்த உம்மத்தின் மீது அம்மக்கள் செய்த பேருபகாரமாகும். அம்மக்கள் தான் நமக்கு ஹதீஸ்களை கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள். மாலிக் பின் அபி ஆமிர் என்பவரின் ஒரு நீண்ட அறிவிப்பில் அவர் கூறுகிறார்.

ஒரு மனிதர் இப்னு உபைதுல்லாஹ்விடம் சென்று கூறினார். அபு உமைர் நீங்கள் அபூஹுரைராவைப் பார்க்கவில்லை. அவர் உங்கள் எல்லாரையும் விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸை அறிவித்து வைத்துள்ளார். உங்களிடமிருந்து நாங்கள் தெரிந்து கொள்ளாத பல அரிய ஹதீஸ்களை அவரிடமிருந்து நாங்கள் கேள்விப்படுகிறோம். அப்போது அன்னார் கூறினார்கள். ஆம்! அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து கேட்ட விஷயங்களை நாங்கள் கேட்டதில்லை. காரணம் என்னவெனில் அவர் மிகவும் வறியவராக இருந்தார். அவரிடம் எதுவும் இருந்ததில்லை. அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் விருந்தாளியாக அவர்களின் அருகில் அமர்ந்திருந்தார். அவரது கை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கையுடன் இருந்தது. நாங்கள் ஹஸ்ரத்

நபி (ஸல்) அவர்களிடம் சில நேரம் காலையில் சில நேரம் மாலையில் வந்து செல்லக் கூடியவர்களாக இருந்தோம். எனவே இவ்வாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அருகிலிருந்து கேட்டறிந்து நமக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள். செய்திகளை கேட்டறியும் சாக்கில் எந்த வேலையும் இன்றி அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள் என்று ஒருபோதும் கருத வேண்டாம். அத்தகைய மக்களுக்கும் பசி பட்டினியை சகித்துக் கொண்டிருக்க வேண்டிய நாட்கள் வரவே செய்தன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அம்மக்களைப் பற்றி எதுவும் கேட்காததால் அவர்களிடம் பட்டினியின் காலம் வந்தது என்பதன்று. ஏற்கனவே வந்த அறிவிப்பில் வந்தது போன்று, வீட்டில் ஏதும் உணவு இருக்கிறதா என்று கேட்ட போது வெறும் தண்ணீரைத் தவிர வீட்டில் எதுவும் இல்லை என்பதையே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டிலிருந்தும் பதிலாக வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டிலும் பல நாட்கள் அடுப்பு எரிந்ததில்லை. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் ஒரு ருசிகரமான அறிவிப்பு இதுவாகும்.

இறைவன் மீது ஆணை! அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஆரம்ப நாட்களில் பசியின் காரணத்தால் வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டு இருந்தேன். சக்தியில்லாமல் பூமியில் வீழ்ந்து கிடந்தேன். ஒருநாள் மக்கள் கடந்து செல்லும் வழியில் அமர்ந்திருந்தேன். அன்னாரிடம் (ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம்) ஒரு திருக்குர்ஆன் வசனத்தின் பொருள் கேட்டேன். எனக்கு அன்னார் உணவு தருவார் என்று எதிர்பார்த்துக் கேட்டேன். ஆனால் அன்னார் வசனத்தின் பொருளை விளக்கி விட்டு சென்று விட்டார்கள். அடுத்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்களிடமும் கேட்டேன். அவர்களாவது உணவு வழங்குவார்கள் என்று எதிர்பார்த்துக் கேட்டேன். அவர்களும் அந்த வசனத்தின் பொருளைக் கூறி விட்டு சென்று விட்டார்கள். பிறகு என்னருகில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வந்தார்கள். எனது நிலையைப் பார்த்து எனது உள்ளத்து நிலையை உணர்ந்து மிகவும் கருணையுடன் என்னை அபூஹுரைரா என்று அழைத்தார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்று கூறினேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னுடன் வா என்று அழைத்துச் சென்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் சென்றார்கள். நானும் உள்ளே செல்ல அனுமதி கேட்டேன். அனுமதி கிடைத்ததும் உள்ளே சென்றேன். அங்கு ஒரு கோப்பை பால் இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இது எங்கிருந்து வந்தது என்று கேட்டார்கள். வீட்டினர் இன்ன வீட்டில் உள்ள பெண் இந்த பாலை அனுப்பி வைத்திருப்பதாகக் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னை அபூஹுரைராவே! என்று அழைத்தார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சொல்லுங்கள் என்றேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். திண்ணையில் உள்ள எல்லாரையும் கூப்பிடுங்கள். அம்மக்கள் திண்ணைத் தோழர்கள் ஆவர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏதாவது உணவு வந்தால் முதலில் அந்த தோழர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். இவ்வாறு நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க அவர்கள் அனைவரையும் அழைத்தேன். இருப்பது ஒரு கோப்பை தான். இதனை எத்தனை பேர் அருந்த முடியும் என்ற எண்ணங்கள் என் உள்ளத்தில் எழுந்தன. நான் அவர்கள் அனைவரையும் விட அதிகம் தேவை உடையவனாக இருந்தேன். திண்ணைத் தோழர்கள் அனைவரும் வந்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குடிக்கக் கொடுக்குமாறு கூறினார்கள். ஐயோ எல்லாம் தீர்ந்து விடும். எனக்கு எதுவும் கிடைக்காது என்ற எண்ணம் ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதால் அவர் சென்றார். எல்லாரும் அவரவர் இடத்தில் அமர்ந்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லாரிடத்தும் கோப்பையை கொடுக்குமாறு கூறினார்கள். எனக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்ற எண்ணம் ஏற்பட்டது. இருப்பினும் கோப்பையை ஒவ்வொருவருக்காக மாற்றி மாற்றி கொடுத்தேன். கடைசியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கொடுத்தேன். எல்லாரும் நன்றாக குடித்து விட்டனர் என்றேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புன்னகை புரிந்தவாறு அபூஹுரைராவே என்றார்கள். சொல்லுங்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே என்றேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இப்போது நாம் இருவர் மட்டும்தான் இருக்கிறோம் இல்லையா? என்றார்கள். நான் கூறினேன். ஆம் யாரஸூலுல்லாஹ்! உடனே நன்றாக குடியும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் நன்றாக குடித்து விட்டு வைத்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இன்னும் குடியும். நான் மீண்டும் மீண்டும் குடித்தேன். குடித்து முடித்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூஹுரைராவே! இன்னும் குடியும். நான் மிக நன்றாக குடித்து விட்டேன். மீண்டும் அன்னார் கூறியபோது நான் கூறினேன். யாரஸூலுல்லாஹ்! தங்களை உண்மையுடன் அனுப்பி அந்த இறைவன் மீது ஆணை.

இப்போது வயிற்றில் கொஞ்சமும் இடமில்லை என்று கூறி குவளையை அன்னாரின் கையில் கொடுத்து விட்டேன். அன்னார் முதலில் இறைவனைப் புகழ்ந்து விட்டு பிஸ்மில்லாஹ் கூறி விட்டு கோப்பை பாலை அருந்தினார்கள்.

அந்த திண்ணைத் தோழர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விருந்தினராகக் கருதினார்கள். எனவேதான் அவர்களை முதலில் பால் அருந்தச் செய்தார்கள். விருந்தோம்பலின் பண்பிற்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை எதிர்பார்த்து அம்மக்கள் அமர்ந்ததை ஹஸ்ரத் நபி (ஸல்) விரும்பினார்கள். எனவே ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சகோதரரிடம் கூறினார்கள். இம்மக்கள் இங்கே அமர்ந்திருக்கின்றனர். அவர்களையும் அவர்களின் வீட்டினரையும் கவனித்துக் கொள்ளுங்கள். பிறகு மக்கா வெற்றிக்குப் பின்னர் வெளியிலிருந்து மக்கள் கூட்டம் வரத்தொடங்கியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த விருந்தினர்களை நன்றாக கவனித்து வந்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், அந்த விருந்தாளிகளை மிகவும் கவனத்துடன் விருந்தோம்பல் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அவர்களுக்கு அன்பளிப்புகளை கொடுத்தனுப்புமாறு கூறினார்கள். இந்நிலையில் நபிஆ கோத்திரத்தைச் சார்ந்த ஒரு கூட்டம் வந்தது. இவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சகோதர கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பு தமது சகோதர கோத்திரத்துடன் சண்டையிட்டு வெளியூர் போய்விட்டிருந்தனர். அந்த கோத்திரத்தார் திரும்பி வந்த போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அம்மக்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். முந்தைய இரு சகோதரர்களின் வம்சங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். பிறகு உற்சாகத்துடன் அவர்களை வரவேற்றார்கள. அக்கோத்திரத்தின் தலைவரை தனது அருகில் அமர வைத்தார்கள். அன்புடன் அவர்களை விசாரித்தார்கள். அன்சார்களிடம் இக்கோத்திரத்தாருக்கு மிக நல்ல முறையில் விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இக்கோத்திரத்தாருக்கு அன்சார்களாகிய உங்களுடன் ஒரு ஒற்றுமை உள்ளது. இவர்களும் உங்களைப் போன்று தாமே முஸ்லிமாகி இங்கு வந்துள்ளனர். மறுநாள் அக்கோத்திரத்தாரிடம் நல்ல விருந்தோம்பல் செய்யப்பட்டதா என்று விசாரித்தார்கள். அக்கோத்திரத்தார் கூறினார்கள். இம்மக்கள் (அன்சார்கள்) உங்களது மிகச் சிறந்த சகோதரர்கள் என்று நிரூபித்து விட்டனர். சிறந்த உணவை எமக்கு வழங்கினார்கள். நன்றாக கவனித்தார்கள். சிறந்த படுக்கையை எங்களுக்காக விரித்தனர். காலையில் எங்களுக்கு திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

இதுவே சஹாபாக்களின முன்மாதிரியாகும். அன்சார் ஏற்கனவே நமது நல்லொழுக்க மேன்மையை வெளிப்படுத்தியிருந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருகை அன்சார்களை மேலும் பக்குவப்படுத்தியது. மேலும் ஒரு அறிவிப்பில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை கேட்டார்கள். உங்களிடம் ஒரு கோத்திரத்தினுடைய தலைவர் அல்லது முக்கியப்பிரமுகர் எவரும் வந்துள்ளார்களா? அவ்வாறு வந்தால் அவர்களின் தகுதிக்கேற்ப கண்ணியமளியுங்கள். நிச்சயமாக கண்ணியத்திற்குரிய மக்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ற கண்ணியத்தை வழங்குமாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

இதுவே முஸ்லிம்களுக்கு இடப்பட்ட கட்டளையுமாகும். ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் முனீர் கோத்திரத்தைச் சார்ந்த விருந்தாளிகளின் ஒரு கூட்டம் வந்திருந்தது. அவர்களின் ஆடை சரியில்லாமல் மிக மோசமான நிலையில் அவர்களிடம் வந்து சேர்ந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களின் இந்த நிலை கண்டு மிகவும் துன்பத்திற்கு உள்ளானார்கள். உடனே மதீனாவின் மக்களை ஒன்று கூட்டினார்கள். இக்கூட்டத்தாருக்கு உணவு, உடைக்கான ஏற்பாடு செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அதற்குப் பிறகும் கூட அவர்களின் உள்ளம் நிம்மதியடையவில்லை. பிறகு அக்கூட்டத்திற்கு முழுமையான எல்லா ஏற்பாடுகளும் முடிந்த பிறகே அவர்களின் முகம் மலர்ந்தது. தங்கம் போன்று மின்னியது. இதே நிலைதான் அன்னாரின் உண்மை அடியாராகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நிலையும் ஆகும். பத்ர் ஜுலை 1904 ரிப்போர்ட்டில் எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் போயிருந்த போது அங்கும் அன்னாரை சந்திக்க நண்பர்கள் வந்தனர். வந்தவர்களின் தேவைகளைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் கவனத்தில் கொண்டார்கள்.

மேன்மை தாங்கிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தோம்பலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் விருந்தோம்பலைப் போன்று உயரிய முன்மாதிரியாக இருந்தது. விருந்தாளியாக வந்தவர் எந்த இயக்கத்தைச் சார்ந்தவராக இருப்பினும் சரி அவருக்கு சிறிதளவு துன்பம் ஏற்பட்டாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அது மிகவும் துன்பத்தைக் கொடுத்தது. அவர்களின் தூய்மையான நெருங்கிய நண்பர்கள் மீது இன்னும் அளவுக்கு அதிகமான அன்பு காட்டினார்கள். மியான் ஹிதாயத்துல்லாஹ் சாஹிப் அஹ்மதி லாஹூர் பஞ்சாப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதத்தை உண்மைப்படுத்தியவர். அவர் சில காலத்திற்க குர்தாஸ்பூர் வந்திருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்து விட்டு விடைபெற்றுச் செல்ல ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இப்போதே ஏன் செல்கிறீர்கள். இங்கே இருங்கள். ஒன்றாக போவோம். இங்கு இருப்பது உங்களுக்கு பரக்கத்திற்கு காரணமாக அமையும். இங்கு தங்குவதில் ஏதும் சிரமம் இருந்தால் கூறுங்கள். சரிசெய்வோம். பிறகு பொதுவாக எல்லாரையும் பார்த்து கூறினார்கள். இங்கு மக்கள் அதிகமாக இருக்கின்றனர். சிலருக்கு தேவைகள் கவனிக்கப்பட முடியாமற் போவது சாத்தியமானதே. எனவே ஒவ்வொருவரும் அவருக்கு தேவையானதை எந்த சங்கடமும் படாமல் கேட்டுப் பெறவும். ஒருவர் வலுக்கட்டாயமாக தமது தேவையை கூறாமல் மறைத்தால் அவர் பாவம் செய்தவராவார். நமது ஜமாஅத்தின் கூட்டம் எந்த போலியான கவுரவமும் பார்க்காமல் இருப்பதாகும்.

ஹஸ்ரத் மியான் ஹிதாயத்துல்லாஹ் சாஹிப் பற்றி கூறிவந்தேன். அவரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிறப்பான கவனத்தில் கொள்ளுமாறு சையத் சர்வர் **ஷா**ஹ் சாஹிபிடம் ஒப்படைத்தார்கள். அவரது எல்லா தேவைகளையும் கவனிக்குமாறு கட்டளையிட்டார்கள். பிறகு அன்னார் விருந்தாளிகளை எப்படி கவனித்தார்கள் என்பதனை அன்னார் கூறிய இந்த வரிகளிலிருந்து புரிந்து கொள்ளலாம். தமது உடல்நிலையைப் பற்றி கவலைப்படாமல் விருந்தாளிகளை சந்திக்க வெளியில் வந்தார்கள்.

ஒருமுறை தமது ஒரு சஹாபியைக் குறித்து கூறினார்கள். எனக்கு இன்று உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. வெளியில் வரத்தக்கதாக இல்லை. ஆனால் நீங்கள் தகவல் கொடுத்தவுடன் விருந்தாளிகளை சந்திக்க வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்தது. எனவே மிகவும் சிரமத்துடன் வெளியில் வந்தேன்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் ஒருமுறை முன்**ஷி** அப்துல்லாஹ் சாஹிபைக் குறித்து கூறினார்கள். நீங்கள் எனது விருந்தாளிகள். எந்த சங்கடமும் கவுரவமும் பார்க்காமல் தனக்கு தேவையானதை கேட்பவரே நிம்மதியாக இருக்க முடியும். உங்களுக்கு என்ன தேவையோ அதனை வெட்கப்படாமல் கேளுங்கள்.

பிறகு ஜமாஅத்திடம் கூறினார்கள். பாருங்கள். இவர் நமது விருந்தாளியாவார். இவரிடம் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்வதும், இவருக்கு எந்த துன்பமும் ஏற்படாமல் இருக்க முயற்சிப்பதும் உங்கள் மீது கடமையாகும். இதனைக் கூறி விட்டு உள்ளே சென்று விட்டார்கள். ஒரு முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். விருந்தாளியின் உள்ளம் கண்ணாடி போன்றது. சிறு கவனமின்மையால் உடைந்து விடுகிறது.

ஒருமுறை கூறினார்கள். ஒரு விருந்தாளி வந்து உங்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளாமல் உங்களை ஏசிப்பேசினாலும் நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

ஒரு முறை லங்கர் கானாவின் பொறுப்பாளரைக் குறித்து கூறினார்கள்: விருந்தாளியின் ஒவ்வொரு தேவையையும் கவனித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் விருந்தாளி தனி ஆள். நமக்கோ பணிகள் அதிகம். எனவே ஏதாவது ஒரு தேவையை நாம் கவனிக்காமல் விட்டுவிட சாத்தியமுண்டு. ஒருவருக்கு மறந்தாலும் இன்னொருவர் நினைவூட்ட வேண்டும். விருந்தாளியின் அழுக்கு உடைகளைப் பார்த்து முகஞ்சுளிக்க வேண்டாம். அவரது ஒவ்வொரு தேவையையும் கவனித்துக் கொள்ளுங்கள். சிலருக்கு கழிப்பிடம் எங்கே

இருக்கிறது? என்று தெரியாது. எனவே விருந்தாளிகளின் தேவையை கவனிக்க வேண்டும். அவர் முற்றிலும் இந்த இடங்களைப் பற்றி தெரியாதவராவார். நான் ஓரிடத்திலிருந்து அனைவரையும் கவனிக்க முடியாது. எனவே அதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள் எந்த புகாரும் வராமல் கவனித்துக் கொள்வது அவர்களின் கடமையாகும். எனவே இவ்வாறு சின்னச் சின்னத் தேவைகளையும் கவனத்தில் கொண்டார்கள்.

மவ்லானா அப்துல்லா சனோரி சாஹிப் மூலம் ஒரு அறிவிப்பில் வருகிறது.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டினர் எங்கோ சென்றிருந்தனர். ஜுன் மாதம் புதிதாக கட்டப்பட்ட பகுதியில் நான் கட்டிலில் ஏறி படுத்து விட்டேன். நன்றாக தூங்கிய பிறகு கண்விழித்துப் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கட்டிலின் கீழ் அமர்ந்திருந்தார்கள். நான் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் அன்புடன் எழுந்து விட்டீர்கள்? என்று கேட்டார்கள். தாங்கள் கீழே உட்கார்ந்திருக்கிறீர்கள். நான் கட்டிலில் உறங்குகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புன்னகைத்தவாறு கூறினார்கள். நான் உங்களுக்கு காவலுக்கு உட்கார்ந்திருந்தேன். குழந்தைகள் சத்தம் போட்டுக் கொண்டிருந்தன. உங்கள் உறக்கம் கலையாமல் இருக்க அவர்களை கட்டுப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

மவ்லவி ஹஸன் அலி சாஹிப் தமது ஒரு சம்பவத்தை எழுதுகிறார்கள். தாயிதே ஹக் என்ற நூலில் வருகிறது. ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் விருந்தோம்பல் கேட்டு நான் மிகவும் வியப்படைந்தேன். ஒரு சிறு சம்பவம் கூறுகிறேன். அதிலிருந்து அவர்களின் விருந்தோம்பும் தன்மையை கேட்பவர் புரிந்து கொள்ளலாம்.

எனக்கு வெற்றிலை போடும் தீய பழக்கம் இருந்தது. அமிர்தசரஸில் எனக்கு வெற்றிலை கிடைத்தது. பட்டாலாவில் வெற்றிலை கிடைக்கவில்லை. வேறு வழியில்லாமல் மற்ற ஏலக்காய் போன்ற பொருள்களை சுவைத்து சமாளித்துக் கொண்டிருந்தேன். யாரோ ஒருவர் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபிடம் எனது பழக்கம் குறித்து தெரிவித்து விட்டார்கள்போலும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருவரை குர்தாஸ்பூருக்கு அனுப்பி வெற்றிலை வாங்கி வரச் செய்தார்கள். பகல் 11.00 மணியளவில் நாங்கள் உணவு உண்டு முடித்த பிறகு எனக்கு முன் வெற்றிலை வைக்கப்பட்டது. இவ்வாறு சின்னச்சின்ன விஷயங்களையும் நிறைவேற்றினார்கள். பல்வேறு பணிகளுக்கு நடுவில் இவற்றை நினைவில் வைத்திருந்தார்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பலமுறை யவுத்தூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக் என்று இல்ஹாம் வந்தது. மக்கள் தூரத்திலிருந்து வருவார்கள். மக்களை அதிகமாக சந்தித்து சோர்ந்து போய் விடாதீர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வில் பலமுறை இவ்வாறு நடந்துள்ளது. மக்கள் அன்னாரை சந்திக்க வந்தனர். அன்னார் அவர்களுக்கு விருந்தாளிக்குரிய அனைத்து உரிமையையும் வழங்கினார்கள்.

அன்னாரது வழிகாட்டியும் எஜமானரும் ஆகிய நபி (ஸல்) அவர்களின் சுன்னத் என்பதனால் இதனை செய்தார்கள். அல்லாஹ்வும் வஹீ மூலம் அதனை உண்மைப்படுத்தினான். எனவே இன்று நமது பணியும் அதுவே.

மக்களிடம் விருந்தாளிகள் வருகின்றனர். அவர்களுள் சிலர் இரத்த உறவினர். சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். சிலர் நண்பர்களாக இருக்கின்றனர்.

ஆனால் இன்று நம்மிடம் வரக்கூடிய விருந்தாளிகள் அதாவது வரும் வாரம் ஜுமுஆவுடன் ஆரம்பிக்கின்ற நமது ஜல்ஸாவில் கலந்து கொள்ள வருகின்றனர். இந்த ஜல்ஸா மார்க்க நோக்கத்திற்காக இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆரம்பித்து வந்தார்கள். இதில் கலந்து கொள்பவர்களுக்காக சிறப்பான துஆவும் செய்துள்ளார்கள்.

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சிறப்பான விருந்தாளிகள் மார்க்க நோக்கத்துடன் வருகின்றனர். அல்லது அந்த நோக்கத்துடன் மட்டுமே வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். எனவே அவர்களுக்கு விருந்தோம்பலும் நாம் செய்ய வேண்டும். குறிப்பாக இறை திருப்தியைப் பெறுவதற்காக செய்ய வேண்டும்.

மார்க்க சகோதரருடன் உள்ள உறவுக்காக நாம் இவ்விருந்தோம்பலை செய்ய வேண்டும். எனவே ஜல்ஸாவின் டூட்டி யாருக்கு தரப்பட்டதோ அதனை முழு முயற்சி, நல்லொழுக்கம், பொறுமை, விவேகம், தூய்மை ஆகியவற்றுடன் நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு விருந்தாளியின் சிறு சிறு தேவையையும் கருத்தில் கொள்ளுங்கள். அவர்களின் ஒவ்வொரு துன்பத்தையும் அகற்ற முயலுங்கள். மேலும் ஜல்ஸாவின் ஏற்பாடு ஒவ்வொருவரையும் விருந்தாளியையும் கவனிப்பது போன்று கவனிக்க வேண்டும்.

டூட்டி செய்பவர் அனைவரையும் சிறந்த முறையில் டூட்டி தருவதற்கு அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக.

இப்போது ஜுமுஆவிற்கு பிறகு இரண்டு ஜனாஸா காயிப் நடத்துவேன். ஒன்று, மஹ்மூத் அஹ்மத் சாஹிப் சீமா. நமது மூத்த கொள்கைப்பரப்பநர். 24 ஜுலை அன்று மருத்துவமனையில் தமது 81 வயதில் ரப்வாவில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அவர் 1939 காதியானில் மத்ரஸா அஹ்மதிய்யாவில் படிக்க வந்தார்கள். பிறகு மவ்லவி பாஸில் செய்தார்கள். தேர்ச்சி பெற்றார். மேற்கு ஆப்பிரிக்காவில் முதன்முதலாக நியமிக்கப்பட்டார்கள். பிறகு அங்கிருந்து திரும்பிய பிறகு பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றினார்கள்.

பிறகு ஜெர்மனி, இந்தோனேஷியா பகுதிகளில் கொள்கைப் பரப்புநராக பணியாற்றினார்கள். இந்தோனேசியாவில் 33 ஆண்டுகால நீண்ட பணியாற்றினார்கள். 2002 -ல் நிரந்தரமாக ரப்வா திரும்பினார்கள். வஃபாத் வரை அங்கேயே இருந்தார்கள். மிகவும் விசுவாசமுள்ளவர். மார்க்கத் தொண்டில் மிகவும் உணர்வுள்ளவராகவும் ஆரம்ப காலத்திலேயே மார்க்கத்திற்கு வாழ்வை அர்ப்பணித்தவராக இருந்தார். மிகவும் சாதுவானவர். கிலாஃபத்துடன் விசுவாசம் உள்ளவர். அவரது நன்மைகளை அவரது சந்ததிகளிலும் அல்லாஹ். தொடரச் செய்வானாக. ஆமீன். அவர்களுக்கு மகள்கள் உள்ளனர். அவர்களுக்கு அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா அப்துல் மூஃமின் சாஹிபின் மகள். நயீம் அஹ்மத் உடைய மனைவி. 14 ஜுலையில் 65 வயதில் வஃபாத் ஆனார்கள். இவர் ஹஸ்ரத் மிர்ஸா ஷரீப் அஹ்மத் சாஹிபுடைய மகள் வழிப் பேத்தியும், மிர்ஸா அஸீஹ் அஹ்மத் சாஹிப் உடைய மகள் வழி பேத்தியும் ஆவார்கள். மிர்ஸா ஸபர் அஹ்மத் சாஹிப் உடைய மகள். மிகவும் விவேகமும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் உள்ளவர். தூய்மையானவர்.

பெற்றோரும் கணவரும் இறந்த பிறகும் எல்லா துன்பங்களையும் சகித்துக் கொண்டனர். எந்த புகாரும் ஒருபோதும் செய்யமாட்டார்கள். எப்போதும் புன்னகைத்தவாறே இருப்பார்கள். நீண்ட காலம் நோயுற்று இருந்த போதிலும் நான் நன்றாக இருக்கிறேன் என்று கூறுவார்கள். இறைவனுக்கு நன்றி செலுத்துவார்கள். ஏனெனில் அவர்களுக்கு இருந்த நோய் மிகவும் வேதனைதரக்கூடியதாக இருந்தது. ஆனால் எவரிடமும் தனக்கு துன்பம் அளிப்பதாக காட்டமாட்டார்கள். அல்லாஹ் அவர்களின் தகுதியை உயர்த்துவானாக; மன்னிப்பை வழங்குவானாக. அவர்களது குழந்தைகளை எப்போதும் நன்மையில் நிலைநாட்டுவானாக. மூன்று மகள்கள் உள்ளனர். ஜுமுஆவிற்குப் பிறகு இந்த இருவரின் ஜனாஸா தொழுகையை நடத்துவேன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 17.07.2009

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**